# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## OS.No.61/2024

PW2–முத்துசாமி நாள்.15.04.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் வெளிநாடு போய்வந்தவன் என்றால் சரிதான். 2013ம் ஆண்டு வெளிநாட்டில் இருந்து இந்தியா வந்தேன். வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் அப்பாவுமான, எனது சித்தப்பா துரைசாமியும் வெளிநாட்டில் இருந்தார். நான் இந்தியா வருவதற்கு முன்பே அவர் வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்துவிட்டார். அன்பழகன் வெளிநாட்டில் இருந்தார். அவரும் என்னுடன் 2013ம் ஆண்டு இந்தியா வந்துவிட்டார். அன்பழகன் 2010ம் ஆண்டிலேயே இந்தியா வந்துவிட்டார் என்றும், அதன்பின்னர் வெளிநாடு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் ஊரில் பஞ்சாயத்து பேசுவது உண்டு. எனக்கு எல்லா விவரமும் தெரியும். ஊரில் உள்ள மாற்றுத்திறனாளிகளை கணக்கெடுப்பார்கள் என்றால் சரிதான். மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை மற்றும் இலவச பஸ்பாஸ் தருவார்கள் என்றால் சரிதான். எழுதிவைத்தால் தருவார்கள். வாதி கவிதா உண்மையில் மாற்றுத்திறனாளியாக இருந்தால் அதை பதிவுசெய்திருப்பார்கள் என்றும், நான் கூறுவதுபோன்று மாற்றுத்திறனாளி இல்லை என்றால் சரியல்ல. அவருக்கு காது கேட்காது, வாய் சரியாக பேசவராது. நான் நீதிமன்றம் வருவதற்கு முன்னர் வாதி கவிதாவை பார்த்துவிட்டு தான் வந்தேன். அவரால் நடக்க முடியும். எறையூர் சின்னாறில் உள்ள கல்யாண மண்டபத்தில் வைத்து பஞ்சாயத்து பேசினோம். நிருபணவாக்குமூலத்தில் கல்யாணமண்டபத்தில் வைத்து பேசியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்தில் மாணிக்கம், ராஜா, இளவரசன், தியாகராஜன், குமரேசன், நான் ஆகியோர்கள் கலந்துகொண்டோம். ராமாதாசும் வந்தார். மேலே சொன்ன நபர்கள் இருதரப்பினருக்கும் பொதுவானவர்கள் ஆவார்கள். சொந்தமில்லாதவர்கள். நான் மட்டும் சொந்தம். மேலே சொன்ன நபர்களை அழைத்து விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியும்என்றால் சரிதான். என்னுடைய சித்தப்பா சம்பாதித்து வாங்கிய

சொத்துகள் சம்மந்தமாக பஞ்சாயத்து பேசினோம். என்சித்தப்பா வீடு கட்டிய இடம் எங்களுடைய பூர்விக இடமாகும். என்னுடைய சித்தப்பாவிற்கு பூர்விக நிலமும் உண்டு. பூர்விக நிலம் சம்மந்தமாக பஞ்சாயத்து பேசவில்லை. நான்கூறுவதுபோன்று பஞ்சாயத்து பேசியிருந்தால் அனைத்து சொத்துக்களை சேர்த்துதான் பேசியிருப்போம் என்றால் சரியல்ல. சிறுவாச்சூரில் உள்ள சொத்துக்களை சுமார் ஒருகோடிக்கு விற்றது சம்மந்தாக நான் ஆவணங்கள் பார்க்கவில்லை. அந்த பணத்தை வைத்து வேறுநிலங்கள் வாங்கினேன். நான் சார்பதிவளார் அலுவலகம் போய்உள்ளேன். வாதி கவிதா பெயரில் 2012ம் ஆண்டில் கிரயபத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சித்தப்பா வாங்கிகொடுத்துள்ளார். வாதி கவிதா தான் நேரடியாக சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியுடன் எனக்கு சரியான பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள விரோதம் காரணமாக வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u>

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.